# 4 கிறிஸ்துவின் அதிசயப் பிறப்பு

**கிறிஸ்தவர்களாகிய எமக்கு உலகிலேயே மிகவும் அதிசயமான பிறப்பு இயேசுவின் பிறப்பாகும். தீமையிலிருந்து எம்மைக் காப்பாற்றி இறைவனின் பிள்ளைகளாக்குவதற்கே இயேசு இவ்வுலகில் பிறந்தார். இறைவன் மனிதர் மீது கொண்டுள்ள அன்பினிமித்தமே இயேசுவை இவ் வுலகிற்கு அனுப்பினார். இயேசுவின் பிறப்போடு தொடர் புடையவர்களையும், சம்பவங்களையும் அறிந்து கொள்வதின் மூலம் இயேசுவின் பிறப்பின் சிறப்பை விளங்கிக் கொள்ளலாம்.**




## காபிரியேல் வானதூதர்


படம் 4.1 காபிரியேல் வானதூதர்

காபிரியேல் வானதூதர் கடவுளுக்குப் பணியாற்றுகிறவரும், கடவுளின் நற்செய்தியைக் கொண்டு வருபவராகவும் அறியப்பட்டு உள்ளார். இயேசு பிறப்பதற்காக மரியா தெரிவு செய்யப்பட்டு உள்ளார் என்ற செய்தியைக் கொடுத்தவர் காபிரியேல் வானதூதர் ஆவார். பிள்ளைக்கு இயேசு என்று பெயரிடவும், அவர் இரட்சகர் என்பதையும் அறிவித்தவர் இவரே (மத். 1:21). இயேசுவின் பிறப்பைக்

குறித்த வானதூதரின் அறிவித்தல், அப்பிறப்பை அதிசயப் பிறப்பாக மாற்றியுள்ளது. இடையர்களுக்கு இயேசுவின் பிறப்புபற்றிய செய்தி வானதூதர் கூட்டத்தினால் கொடுக்கப்பட்டது. இச்சம்பவங்கள் மூலம் இயேசுவின் பிறப்பின் அதிசயத் தன்மையை நாம் அறிந்துகொள்ளலாம்.

## மரியாவும் யோசேப்பும்



படம் 4.2 மரியாவும் யோசேப்பும்

இயேசுவின் பிறப்பிற்காக தான் தெரிவு செய்யப்பட்டிருப்பதைக் கேள்விபட்டதும் மரியா மிகவும் அச்சம்கொண்டார். ஆனாலும் அவர் தாழ்மையாக நடந்து இறை திட்டத்திற்கு கீழ்ப்படிந்தார்.

யோசேப்பும் இந்த சிறப்பான பிறப்பிற்காக இறை சித்தத்திற்கு கீழ்ப்படிந்தார். அவருடைய கீழ்ப்படி வினால் மரியாவை நன்கு கவனித்துக் கொண்டார்.

## இடையர்கள்



படம் 4.3 இடையர்கள்

இயேசுவின் பிறப்பை முதன் முதலாக வானதூதர்கள் இடையர்களுக்கு அறிவித்தனர். அன்றைய சமூகத்தின் செல்வந் தர்களுக்கோ, உயர்பதவி வகித்த வர்களுக்கோ அன்றி ஏழை இடையர்களுக்கே இயேசுவின் பிறப்பு செய்தி அறிவிக்கப்பட்டது.

இந்த செய்தியைக் கேள்வி பட்டதும் அவர்கள் எழுந்து சென்று இயேசு பாலகனைக் கண்டார்கள். இச்சம்பவமும் இயேசு வின் பிறப்பின் அதிசயத்தையே உணர்த்துகிறது.

## ஞானிகளும் சிறப்பு விண்மீனும்



படம் 4.4 ஞானிகளுக்கு வழிகாட்டிய விண்மீன்

இயேசுவின் பிறப்பின் அதிசயத்தை உணர்த்தும் இன்னொரு சம்பவம் ஞானிகள் வானத்தில் எழுந்த ஒரு விண்மீனால் பிறப்புபற்றி உணர்த்தப்பட்டதாகும். இந்த விண்மீன் அவர்களை இயேசு பிறந்த இடமான பெத்தலகேமுக்கு வழிநடத்தியது. அவர்கள் ஆரம்பத்தில் ஏரோதுவின் மாளிகைக்கு சென்றாலும், பின்னர் அந்த விண்மீனைப் பின்தொடர்ந்து பெத்தலகேமுக்குப் போனார்கள். அவர்கள் பொன், சாம்பிராணி, வெள்ளைப்போளம் ஆகியவற்றை காணிக்கையாகக் கொடுத்து வணங்கினார்கள். அவ்வாறே இறை ஏவுதலால் கனவில் எச்சரிக்கப்பட்டு, ஏரோது அரசனின் மாளிகைக்குச் செல்லாது, வேறு வழியாகத் தங்கள் நாடு திரும்பினார்கள். இயேசுவின் பிறப்பின் அதிசயத் தன்மைக்கு இச்சம்பவம் இன்னொரு சான்றாகும்.

## தீவனத் தொட்டி

குழந்தை இயேசுவை சரியாகக் கண்டு கொள்ளுவதற்கு வானதூதர்கள் கொடுத்த அடையாளமானது ‘குழந்தையை துணிகளில் சுற்றித் தீவனத் தொட்டியில் கிடத்தியிருப்பதைக் காண்பீர்கள்’ என்பதாகும்.



படம் 4.5 தீவனத் தொட்டி

இறைமைந்தன் ஏழையாக பிறந்ததும், பெத்தலகேமில் சத்திரத்தில் இடம் இல்லாமல் மாட்டுத் தொழுவ தீவனத் தொட்டியில் பிறந்த சம்பவமும் இயேசுவுடைய அதிசயப் பிறப்பை எடுத்துக் காட்டுகின்றது.

மாட்டுத்தொழுவத்தில் இயேசு பிறந்தது, அவர் ஏழைக்கோலம் எடுத்தது மாத்திரமல்ல ஏழ்மைக்கு எதிரான அவருடைய சவாலையும் எடுத்துக்காட்டுகின்றது.

இயேசுவின் பிறப்போடு தொடர்புற்ற சம்பவங்களுள் வான தூதர்களின் பாடல் பொருள் மிகுந்ததாகும்.

*''உன்னதத்தில் கடவுளுக்குமாட்சி உரித்தாகுக!*
*உலகில் அவருக்கு உகந்தோருக்கு*
*அமைதி உண்டாகுக!''*

**இயேசுவின் பிறப்பின் சிறப்புத்தன்மையை விளங்கி நாம் செயல்பட வேண்டும். வானதூதர் பேரணி கடவுளைப் பாடி புகழ்ந்தது போல, இயேசுவின் பிறப்புச் செய்தியை உலகிற்கு அமைதி உண்டாக்கும் செய்தியாக நாம் அறிவிக்கலாம். இயேசுவின்பிறப்பானது கடவுளுக்கும் மனிதருக்கும், மனிதருக்கும் மனிதருக்கும் இடையில் உள்ள உறவைப் புதுப்பித்து, ஒற்றுமையையும், அமைதியையும் ஏற்படுத்தியது.**

*மனனவசனம்:*
*லூக்கா 2: 11-12*

**இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார். குழந்தையைத் துணிகளில் சுற்றித் தீவனத்தொட்டியில் கிடத்தியிருப்பதைக் காண்பீர்கள். இதுவே உங்களுக்கு அடையாளம் என்றார்**

செயற்பாடு

1. திருமறையில் காணப்படுவது போல் குழந்தை இயேசுவைக் காணவந்தவர்களைக் குறிப்பிடுக.

2. இயேசு பிறப்பைக் கொண்டாடும் கிறிஸ்தவர்கள் மேற்கொள்ளும் நற்செயல்கள் மூன்றை குறிப்பிடுக.